

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 30-06-2025


# விண்வெளிக்குள் இந்திய வீரர்

விண்வெளிக்குள் இந்திய வீரர் நுழைந்துவிட்டார். சுபான்ஷு சுக்லாவின் சாதனை வரலாற்றில் பேசப்படும் சாதனையாக அமைந்து விட்டது.

'ஆக்ஸியம் 4' என்ற திட்டத்தின் கீழ் இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட குழு, 'டிராகன்'விண்கலம் மூல மாக சர்வதேச விண்வெளி நோக்கிய பயணத்தை கடந்த 25ஆம் தேதி மதியம் வெற்றிகரமாகத் தொடங்கியது. அமெரிக்காவில் உள்ள புளோரிடா நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து புறப்பட்டார்கள். 26 ஆம் தேதி மாலையில் சென்றடைந்தார்கள். பூமியில் இருந்து 400 கி.மீட்டர் உயரத்தில் சர்வதேச விண்வெளி மையம் இருக்கிறது. பல்வேறு நாடுகள் இணைந்து இந்த மையத்தை உருவாக்கி இருக்கிறது. டிராகன் விண்கலம் புவி சுற்று வட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டதும் அவர்கள் தங்கள் விண்கலத்துக்கு 'கிரேஸ்' என்ற பெயரைச் சூட்டி இருக்கிறார்கள். 14 நாட்களுக்குப் பிறகு இவர்கள் மீண்டும் பூமிக்குத் திரும்புவார்கள்.

60 சோதனைகளை இவர்கள் மேற்கொள்கிறார்கள். இதில் முக்கியமானது விண்வெளியில் தாவரங்கள் முளைக்குமா என்பதைப் பற்றியது ஆகும். இதற்காக விதைகளை அவர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள். உடலின் இயக்கம் எப்படி இருக்கும் என்பது குறித்தும் இவர்கள் ஆய்வு செய்ய இருக்கிறார்கள்.

'ஆக்ஸியம் ஸ்பேஸ்' என்பது அமெரிக்காவில் செயல்படும் மனித விண்வெளிப் பயணச் சேவை நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்தின் சார்பில் தான் இந்திய வீரர் சுக்லா சென்றுள்ளார். அவருடன் பெக்கி விட்சன் (அமெரிக்கா, நாசாவின் பெண் தளபதி), ஸ்லாவோஸ் (போலந்து), திபோர் கபு (ஹங்கேரி) ஆகியோர் சென்றுள்ளனர். இந்தப் பயணம் கடந்த மே மாதமே தொடங்குவதாக இருந்தது. ஆனால் தள்ளிப் போனது. சாதகமான வானிலையை வைத்து இந்தப் பயணம் திட்டமிடப்படுகிறது.

**கடந்த 1984 ஆம் ஆண்டு ரஷிய விண்கலத்தில் பயணித்தார் இந்திய வீரர் ராகேஷ் சர்மா. விண்வெளியில் பயணித்த முதல் இந்திய வீரர் அவர்தான். ஏழு நாட்கள் அவர் தங்கி இருந்தார். 41 ஆண்டுகளுக்குப் பிறகு இதே சாதனையை நிகழ்த்தி இருக்கிறார் சுபான்ஷு சுக்லா. விண்வெளிக்குப் பயணிக்கும் இரண்டாவது இந்திய வீரர் சுக்லா. அதேநேரத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் செல்லும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் பெறுகிறார்.**

உ.பி.மாநிலத்தைச் சேர்ந்த சுக்லாவுக்கு இப்போது 39 வயது. 2006 ஆம் ஆண்டு இந்திய விமானப் படையில் சேர்ந்துள்ளார். 2019 ஆம் ஆண்டு இஸ்ரோவின் 'ககன்யான்' திட்டத்துக்காகத் தேர்வு ஆனார். உயர்ரக போர் விமானங்களில் 2000 மணி நேரத்துக்கும் அதிகமாக பயணம் செய்த அனுபவம் கொண்டவர் சுக்லா.

விண்வெளியில் இருந்து நாட்டு மக்களுக்குப் பேசிய சுக்லா, "41 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நாம் விண்வெளியை அடைந்துள்ளோம். இந்தியாவின் மனித விண்வெளிப் பயணத் திட்டத்தை நாம் அனைவரும் இணைந்து மேற்கொள்வோம்" என்று சொன்னார். மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் 'ககன்யான்' திட்டத்துக்காகத் தேர்வான வீரர்களில் ஒருவர்தான் சுக்லா. தனது ஆர்வத்தின் காரணமாக முன்கூட்டியே இந்தப் பயணத்தோடும் தன்னை சுக்லா இணைத்துக் கொண்டுள்ளார்.

விண்வெளித் துறையில் இந்தியா தனது கவனத்தைச் செலுத்தி வருகிறது. இஸ்ரோ இதில் பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறது. ஆதித்யா எல்1, ககன்யான் ஆகிய திட்டங்கள் இந்தியாவின் முக்கியமான எதிர்கால விண்வெளித் திட்டங்களாகக் கருதப்படுகிறது. விண்வெளித் துறை வளர்ச்சியானது அந்தத் துறைக்கு மட்டுமல்லாமல் மற்ற துறைகளுக்கும் தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன. தொலைத் தொடர்புக்கு இவை அடிப்படையாக அமைந்துள்ளன. காலநிலை மாற்றம் இன்று மிகப்பெரிய நெருக்கடியாக உள்ளது. அதனைக் கணிப்பதற்கும் இது போன்ற ஆய்வுகள் தேவையாக இருக்கின்றன.

**செவ்வாய் கிரகத்தை அடைதல், நிலவை ஆய்வு செய்தல் என இந்தியாவின் முயற்சிகள் உலகநாடுகளால் உன்னிப்பாகப் பார்க்கப்படுகின்றன. நிலவுக்கு செயற்கைக் கோள் அனுப்பி ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணம் 1999 ஆம் ஆண்டு இந்திய அறிவியலாளர்களுக்கு ஏற்பட்டது. இதுதான் 'சந்திராயன் 1' திட்டம் ஆகும். இந்தத் திட்டத்துக்கு மயில்சாமி அண்ணாதுரை தலைவராக இருந்தார். 2008 ஆம் ஆண்டு இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. நிலவில் ஒரு பொருளை வைத்த நான்காவது நாடாக இந்தியா உயர்ந்தது. செவ்வாய் கிரகத்துக்கு செயற்கைக் கோள் அனுப்பிய நாடு என்ற பெருமையை 2014 ஆம் ஆண்டு இந்தியா பெற்றது.**

**விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த வீரமுத்துவேல் சந்திரயான் 3 திட்ட இயக்குனராக இருந்தபோது, நிலவின் தென் துருவத்தில் சந்திரயான் 3 விண்கலத்தை தரையிறக்கி உலக நாடுகளை திரும்பிப் பார்க்க வைத்து இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்தார். இத்தகைய சாதனைகளின் தொடர்ச்சி யாகவே இதனை நாம் பார்க்க வேண்டும்.**

2027 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் நேரடி விண்வெளிப் பயணம் நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, "இந்தியாவின் மனித விண்வெளித் திட்டத்தின் தொடக்கம்" என்று சுக்லா சொல்லி இருக்கிறார். நல்ல தொடக்கமாக அமையட்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.06.2025) முகாம் அலுவலகத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தனது திருமண நாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

# 8 மீனவர்களை பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜூன் 30-**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வரவும், மீனவர்கள் பிரச்சினைகளைக் கையாள்வதில், இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்யவும், மீன்பிடிதொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்வதற்கு இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.06.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் கடுமையாக பாதிக்கும் இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கை குறித்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ள முதலமைச்சர் அவர்கள், 29.06.2025 அன்று இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 08 மீனவர்களுடன், INDTN10MM773 பதிவு எண் கொண்ட அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகையும் சிறைபிடித்துள்ளதாக வருத்தத்துடன் குறிப்பிட்டு;ளளார்.

இத்தகைய கைது நடவடிக்கைகள், படகுகள் மற்றும் உபகரணங்கள் இழப்பிற்கும், நீண்டகால சிறை பிடிப்பிற்கும் வழிவகுப்பதோடு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். எனவே கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்ய ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட வேண்டும் என்று தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வருடாந்திர மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்து, மீன்பிடிப் பருவம் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், நமது மீனவர்கள் வாழ்வாதாரம் ஈட்டும் நம்பிக்கையுடன் மீன்பிடிக்க கடலுக்குத் திரும்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் மீன்பிடி தொடர்பான பிரச்சனைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்ய இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கீழடி மனிதர் முகம்! மதுரை காமராசர் பல்கலை ஆராய்ச்சிக்கு பிரிட்டன் ஆய்வகம் சான்று!

# கீழடி அறிக்கையை இதற்குப் பிறகாவது ஒன்றிய அரசு வெளியிடுமா?

## அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி!

**சென்னை, ஜூன் 30-**

**கீழடி மனிதர் முகம் வடிவமைக்கப்பட்டுள்ள செய்தியை அடுத்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர் தங்கம் தென்னரசு, "இதற்குப் பிறகாவது ஒன்றிய அரசு கீழடி அறிக்கையை வெளியிடுமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவரது பதிவு வருமாறு:-



கீழடியில் கிடைத்த மனித மண்டை ஓடுகளை ஆய்வு செய்து 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் முகத்தை அறிவியல் வழியில் வடிவமைத்துள்ளது இங்கிலாந்தின் லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக் கழகம்.

கீழடியில் தமிழ் மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கான அறிவியல் சான்றுகள் ஒன்றின் பின் ஒன்றாக உலக அரங்கில் நிரூபிக்கப்படுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இதற்குப் பிறகாவது ஒன்றிய அரசு கீழடி அறிக்கையை வெளியிடுமா? என்பதே 8 கோடி தமிழர்களின் மனங்களில் எழும் ஒரே கேள்வி!

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டுள்ளார்.

### அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும்!

# வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல்லை!

## போக்குவரத்து – மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திட்டவட்ட அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 30-**

**வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை, அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை வருமாறு:-

சமூக வலைதளங்களிலும், சில செய்தி ஊடகங்களிலும் மின் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் பரவி வந்த நிலையில், அது தொடர்பாக, ஏற்கனவே 20.05.2025 அன்று வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை என விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது மீண்டும் மின் கட்டணம் குறித்த வதந்திகள் தொடர்ந்து பரவி வருவதால், இது குறித்து மீண்டும் அரசின் சார்பில் தெளிவுபடுத்தப்படுகிறது.



தற்சமயம், மின் கட்டண உயர்வு குறித்து எவ்வித ஆணையும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் வெளியிடப்படவில்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒழுங்குமுறை ஆணையம் மின்கட்டணம் தொடர்பாக ஏதேனும் ஆணை வழங்கினாலும், அதனை நடைமுறைப்படுத்தும்போது வீட்டு மின் நுகர்வோர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், எந்தவொரு மின் கட்டண உயர்வும் இருக்காது எனவும், தற்போது வழங்கப்படும் 100 யூனிட் இலவச மின்சாரம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, மின் கட்டண உயர்வு குறித்த தேவையற்ற வதந்திகளைப் பொதுமக்கள் நம்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.